மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.

முன்னிலை: **திரு. செ. ராஜ்குமார், B.A.B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, இலால்குடி.

2022–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08–ம் நாள் வியாழக்கிழமை

EA.01/22

in

EP.10/2021

in

OS.512/2015

1. தலைவர், தத்தமங்களம் பஞ்சாயத்து.
2. ஆணையாளர், மண்ணச்சநல்லூர் ஒன்றியம்.

........மனுதாரர்கள்/1,3 எதிர்மனுதார்கள்/தீர்ப்புக்கடனாளிகள்

//எதிராக//

சந்திரா

........எதிர்மனுதாரர்/மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்

இம்மனு என் முன்பு 14.11.2022–ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.மதியழகன் அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிருரை மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இதுநாள் வரை என் ஆய்விலிருந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

1. மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 21, விதி 106 உ/இ பிரிவு 151-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1 மற்றும் 3ம் மனுதாரர்/தீர்ப்புக்கடனாளிகள் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்:-**

2.1) மனுதாரர், இம்மனுவை தனக்காகவும், 3ம் மனுதாரருக்காகவும் தாக்கல் செய்துள்ளார்.

2.2) மனுதாரர், நிறைவேற்று மனுவில் 1ம் மனுதாரர் ஆவார். நிறைவேற்றுகை மனுவானது 04.04.2022 அன்று மனுதாரர் தரப்பு பதிலுரைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது, அன்றைய தினம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், அன்றைய தினமே மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2.3)ஆகவே, மனுதாரருக்கு எதிராக கடந்த 04.04.2022-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3. எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தாக்கல் செய்த எதிர் மனுவுரையில் கண்ட சுருக்கம்:-**

மனுதாரர் தனது மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளில், இவ்வெதிர்மனுதாரரால் குறிப்பிட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர, மற்ற அனைத்து சங்கதிகளையும் இந்த மனுதாரரே நிரூபிக்க

கடமைப்பட்டவர். இம்மனு சட்டப்படிக்கும், பொருண்மைப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் தனது மனுவை 30 நாட்களுக்குள் தாக்கல் செய்திருக்க வேண்டும், காலதாமதமாக மனுவை தாக்கல் செய்துள்ளதால், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>5. இருதரப்பும் கேட்கப்பட்டது</u>**

6. மனுதாரர்கள் தரப்பில், 04.04.2022–ம் தேதியன்று மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி கட்சி செய்யப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் தரப்பில் கூறிய காரணங்கள் பொய்யானவை என்பதால், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கட்சி செய்யப்பட்டுள்ளது.

8. மனு, எதிருரை மற்றும் வழக்காணவங்களை பரிசீலனை செய்ததில், 04.04.2022–ம் தேதியன்று மனுதாரர்கள் பதிலுரை தாக்கல் செய்யாததால், மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் நிறைவேற்றுகை மனுவானது, விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரர்கள் தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி, உரிய நேரத்தில் மனு தாக்கல் செய்து தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரியுள்ளதாலும்,

மனுதாரர்களுக்கு மேலும் ஒரு வாய்ப்பை வழங்கி, வழக்கை நடத்த அனுமதித்தால் தான், வழக்கை உரிய முறையில் தீர்மானிக்க முடியும் என்பதால், மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

9. இறுதியாக,

மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2022-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:-</u>**

இல்லை.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:-</u>**

இல்லை.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2022.12.08 19:36:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.